2009 ஜூலை 1]   [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(2-7-2009)* வியாழக்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

54. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

55. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

60. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

61. மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

62. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் "2009-2010 ஆம் ஆண்டிற்கான செயலாக்கம்" என்கிற சிறு நூல். (தமிழ்)

63. சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2009-2010. (தமிழ்)

64. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2009-2010.* (தமிழ்)

65. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2009-2010.* (தமிழ்)

66. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினேழாவது அறிக்கை. *(2008-2009)*

67. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினெட்டாவது அறிக்கை. *(2008-2009)*

68. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை. *(2008-2009)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS